ந.க.எண். 3685/2007/ஈ5

பேரூராட்சிகள் ஆணையரகம்
சென்னை

நாள் : 5.3.2007

**சுற்றறிக்கை**

பொருள் – பேரூராட்சிகள் – செலவினம் – முறையற்ற மற்றும் தேவையற்ற செலவினங்கள் தவிர்த்தல் – அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

உள்ளாட்சி நிதி கணக்குத் துறை இயக்குநரில் கடிதம் வாயிலாகவும், பேரூராட்சிகளின் தணிக்கை அறிக்கைகள் மூலமாகவும் அநேக பேரூராட்சிகளில் முறையற்ற மற்றும் தேவையற்ற செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அத்தியாவசியமான நெறிமுறைகளுக்குட்பட்டு செலவினங்கள் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும். அநேக பேரூராட்சிகளில் சுய வருமானத்திற்கு (own revenue) மிகைப்பட்டு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுகாதாரப் பராமரிப்புக்கான பொருட்கள், உதாரணமாக, பினாயில், சுண்ணாம்பு, பிளீச்சிங் பவுடர், குடிநீர் பராமரிப்பில் பைப்லைன் ரிப்பேர், மிகக் குறுகிய காலங்களில் மின்மோட்டார் கருவி பழுதுபார்த்தல் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பில் அடிக்கடி விளக்குகள் வாங்குதல் போன்ற இனங்களில் மிகவும் அபரிமிதமாக செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. மேலும் ஒரு குறிப்பிட்ட பணிக்காக வழங்கப்பட்ட மான்யத் தொகையிலிருந்து மேற்கொள்ளப்படுவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

எனவே தேவையற்ற மற்றும் முறையற்ற செலவினங்களைக் கட்டுப்படுத்தி, வரவினத்திற்குள் செலவினத்தை மேற்கொண்டு உபரித் தொகையை பேரூராட்சி பகுதிகளின் வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்தும் வகையில் செயல் அலுவலர்களுக்குத் தக்க அறிவுரை வழங்கிட உதவி இயக்குநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாதம் ஒரு பேரூராட்சிக்கு தற்செயல் பயணம் (random visit) மேற்கொண்டு முந்திய மாதம் வரையிலான செலவினத்தை ஆய்வு செய்து மிகைச் செலவினம் கண்டறியப்படின் தக்க நடவடிக்கை எடுத்து இவ்வியக்கத்திற்கும் தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இச்சுற்றறிக்கை கிடைக்கப் பெற்றமைக்கு ஒப்புகையை உடன் அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இயக்குநருக்காக

பெறுநர்
அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்

நகல் :

1) இயக்குநரின் நேர்முக உதவியாளர்
2) கணக்கு அலுவலர்

உபரி – 2